**<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஆத்தூர்</u>**

முன்னிலை : **திருமதி. D.ஜான்சி ராணி, MBA., LLM.,**

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**ஆத்தூர்.**

2026–ஆம் ஆண்டு, பிப்ரவரி திங்கள், 10–ஆம் நாள், செவ்வாய்கிழமை

**<u>இ.ம.எண். 2/2022 இன் அ.வ.எண்.184/2013</u>**

**<u>CNR No. TNSA13-000064-2013</u>**

கலைவாணி . . . மனுதாரர்/வாதி

/எதிராக/

1. சிங்காரம்
2. ரத்தினம் . . . எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனுவின் மீதான விசாரணையானது, 02.02.2026–ஆம் தேதியில் இந்நீதிமன்றத்தின் முன்பு இறுதியாக வந்தபோது, மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.D.கண்ணன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.A.மருதமுத்து அவர்கள் ஆஜராகியும், இருதரப்பிலும் எடுத்துரைத்த வாதுரைகளைக் கேட்டும், இரு தரப்பு ஆவணங்களை பரிசீலித்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

**<u>உத்தரவு</u>**

இம்மனுவானது தாவாவில் திருத்தம் செய்ய வேண்டி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 6 விதி 17 மற்றும் பிரிவு 151ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **<u>மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம் :</u>**

மனுதாரர் வழக்கில் வாதி என்றும், வழக்கானது பிரதிவாதிகளுக்கு எதிராக விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமும், இடைக்கால தடை உத்தரவு கோரி மனுவையும் தாக்கல் செய்து 09.02.2013 அன்று இடைக்காலத்

தடை உத்தரவு பிறப்பித்துள்ளதாகவும், அது இப்போதும் நடைமுறையில் உள்ளது என்றும், இந்நிலையில், பிரதிவாதியும் அவரது மகனும், அவரது ஆட்களும் தற்போதுள்ள வாய்க்கால், வரப்பு மற்றும் பயன்பாட்டு பாதையை அழித்து, வாதி பொது கிணற்று நீரைப் பயன்படுத்தி தனது விவசாய நிலத்தை பயிரிட முடியாதபடி கூரை கொட்டகையை கட்டியுள்ளதாகவும், மேலும், இரும்பு கம்பி மூலம் வேலி அமைத்து, வாதியின் தெற்குப் பக்க நிலத்தை ஆக்கிரமித்துள்ளதாகவும், மேலும், பொது கிணற்றிலிருந்து வாய்க்கால், வரப்பு மற்றும் பயன்பாட்டு பாதையை அழித்துள்ளதாகவும், இந்நீதிமன்றத்தால் ஏற்கனவே இடைக்கால தடை உத்தரவு வழங்கப்பட்டிருந்த நிலையிலும் பொது கிணறு, வரப்பு மற்றும் பயன்பாட்டு பாதையை அழித்துவிட்டதாகவும், வழக்கின் தற்போதைய இயற்பியல் அம்சத்தை குறிப்பிட வாதி ஏற்கனவே ஆணையர் நியமனம் கோரி மனு தாக்கல் செய்து அம்மனுவானது இ.ம.எண்.297/2018 ஆக எடுத்துக்கொள்ளப்பட்டு இந்நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டது என்றும், வாதி, இந்த உத்தரவுக்கு எதிராக C.R.P.எண்.1607/2020 இல் மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்து நிலுவையில் இருந்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வழக்கு நிலுவையில் இருக்கும்போது, 20.03.2022 அன்று பிரதிவாதிகள் மீண்டும் கூரை கொட்டகையை முழுவதுமாக கட்டி, வேலியை சரிசெய்து, வழக்குச் சொத்தை ஆக்கிரமித்துள்ளதாகவும், எனவே செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி இரும்பு வேலி மற்றும் புதிதாக கட்டப்பட்ட கொட்டகையை அகற்றுவதற்கும், பொது கிணற்று நீரை வாதியின் விவசாய நிலத்திற்கு, எடுத்துச் செல்லக்கூடிய பாதையைப் பயன்படுத்துவதற்கும், நீதிமன்ற கட்டணங்களைச் சேர்ப்பதற்கும் வழக்கில் திருத்தம் செய்யப்பட வேண்டும் என்றும், எனவே மனுவில் கண்டுள்ளபடி தாவாவை திருத்தம் செய்ய வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. <u>எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்:</u>

இம்மனுவில் குறிப்பிட்டுள்ள சங்கதிகளில் எதிர்மனுதாரர்கள் வெளிப்படையாக ஒப்புக்கொண்டுள்ள சங்கதிகளை தவிர மற்றவற்றை மறுக்கிறார்கள். மனுதாரர் /வாதியால் இவ்வழக்கில் ஏற்கனவே இந்த எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் வாய்க்கால், வரப்பு மற்றும் பொது கிணற்றுக்கு செல்லும் பாதையை அழித்து விட்டதாக பொய்யான காரணங்களின் அடிப்படையில் வழக்கு தாக்கல் செய்தும், நீதிமன்ற ஆணையர் நியமனம் கோரி மனு தாக்கல் செய்து இந்நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டது. தற்பொழுது அதே உண்மையற்ற காரணங்களின் அடிப்படையில் மனுதாரர் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் கோரியுள்ளது போல எதிர்மனுதாரர்கள் எவ்விதமான வாய்க்கால், வரப்பு மற்றும் பாதையை அழிக்கவில்லை என்றும், மனுதாரர் கூறியுள்ளது போல பொது கிணறு இல்லை என்றும், இந்த எதிர்மனுதாரர்கள் தாவா சொத்தின் தென் பகுதியை ஆக்கிரமிப்பு செய்து வேலி அமைத்ததாக கூறியுள்ளது தவறு என்றும், இந்த எதிர்மனுதாரர்கள் தாவா சொத்தில் எவ்விதமான கூரை கொட்கையும் அமைக்கவில்லை என்றும் கூறியுள்ளனர்.

மேலும் இந்த வழக்கு தாக்கல் செய்யப்படுவதற்கு முன்பே மேற்கண்ட இரும்பு வேலியும், கூரை கொட்டகையும் அமைக்கப்பட்டதாகவும், சர்வே எண்.188/1D ல் உள்ள நிலம் எதிர்மனுதாரர்களுக்கு பாத்தியப்பட்டது என்றும், அதில் கிணறும் மின் இணைப்பும் பிரதிவாதிகள் பெயரில் உள்ளது என்றும், மனுதாரர் /வாதிக்கு மேற்படி சொத்தில் எவ்வித உரிமையும் இல்லை என்றும், இந்த எதிர்மனுதாரர்கள் தான் தாவா சொத்தின் முழு அனுபவத்தில் இருந்து வருகிறார்கள் என்றும், எதிர்மனுதாரர்களிடமிருந்து சொத்தை அபகரிக்கும் எண்ணத்தில் மனுதாரர்/வாதி போலி ஆவணங்களை தயார் செய்துள்ளார் என்றும், தாவா சொத்தில் அவர் எப்போதும் அனுபவத்தில் இருந்ததில்லை என்றும் கூறியுள்ளனர்.

மேலும் மனுதாரர்/வாதிக்கு பிரதிவாதிகளின் நிலத்திற்கு வடபுறத்தில் நிலம் உள்ளதாகவும், பிரதிவாதிகள் தங்களது நிலத்தில் கிழமேலாக இரும்பு வேலி

அமைத்துள்ளதாகவும், இந்த மனுதாரர் வேண்டுமென்றே இந்த மனுவை தாக்கல் செய்துள்ளதாகவும், இந்த எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் சர்வே எண்.188/1B, 188/1C, 188/1D, 188/1E, 188/1F, 188/1G, 188/1H, 188/1I ஆகிய நிலங்களின் உரிமையாளர்கள் என்றும், இந்த எதிர்மனுதாரர்கள் சர்வே எண்.188/1D –க்கான வருவாய் ஆவணங்களில் மனுதாரர்/வாதியின் பெயர் இடம் பெற்றுள்ளதை நீக்க வேண்டி நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாகவும், எனவே இம்மனு அவசியமற்றது என்றும், எனவே இம்மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என எதிருரை தாக்கல் செய்துள்ளனர்.

4. இரு தரப்பு வாதமும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

5. மனுதாரர்/வாதி இவ்வழக்கை சர்வே எண். 188/1D ல் உள்ள ஏக்கர் 2.15 செண்ட் நிலத்திற்கும், சர்வே எண். 188/1D–ல் உள்ள கிணறு, திட்டு, திடல், கவளை, பாதை ஏத்தல் இறைப்பு வாய்க்கால் இவைகளில் 3 ல் 1 பாகம் தொடர்பாக விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார். தற்பொழுது இந்த மனுவில் வழக்கு நிலுவையில் இருந்து வரும் பொழுது எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் ஏற்கனவே இருந்த வாய்க்கால் வரப்பை அழித்து விட்டதாகவும், தாவா சொத்தில் அமைந்துள்ள இரும்பு வேலியை நீக்க வேண்டியும், இவ்வழக்கில் திருத்தம் செய்ய வேண்டி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

எதிர்மனுதாரர்கள் தரப்பில் மனுவில் கூறியுள்ள சங்கதிகள் அனைத்தையும் மறுத்துள்ள போதிலும், சர்வே எண்.188/1D ல் கிணறு மற்றும் மின் இணைப்பு இருப்பதையும், வருவாய் ஆவணங்கள் மனுதாரர்/வாதியின் பெயரில் இருப்பதையும் ஒப்புக்கொண்டுள்ளனர். ஆனால் மேற்படி கிணறு மற்றும் மின் இணைப்பு எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் பெயரில் இருப்பதாக பதிலுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மனுதாரர்/வாதி தனது வழக்குரையில் மேற்படி சர்வே எண்ணிலுள்ள கிணறு, திட்டு, திடல், கவளை, பாதை, ஏத்தல், இறைப்பு, வாய்க்கால் ஆகியவைகளில் 3 ல் 1 பாகம் கேட்டு விளம்புகை பரிகாரம் மற்றும்

நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி இவ்வழக்கு தாக்கல் செய்துள்ள நிலையில் தற்பொழுது மனுவில் கூறப்பட்டுள்ள திருத்தங்களை மேற்கொள்ள அனுமதிப்பது மேற்கொண்டு இதே சொத்து தொடர்பாக வேறு வழக்கு தாக்கல் செய்யப்படுவதை தடுக்கும் எனவும், எனவே இம்மனுவை நீதியின் நலன் கருதி அனுமதிப்பதே உகந்தது என இந்நீதிமன்றம் கருதுகிறது.

6. தீர்வு

இறுதியாக, இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, பிழை திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2026–ஆம் ஆண்டு, பிப்ரவரி திங்கள், 10–ம் நாள், திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

D JANSIRANI
Digitally signed by D JANSIRANI
Date: 2026.02.10 18:43:53 +0530

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி**
**ஆத்தூர்.**

1. மனுதாரர்/வாதி தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:

இல்லை

2. எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:

இல்லை

D JANSIRANI
Digitally signed by D JANSIRANI
Date: 2026.02.10 18:44:00 +0530

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி**
**ஆத்தூர்.**

**<u>கூ.மா.உ.நீ. ஆத்தூர்</u>**
அசல்/வரைவு/உத்தரவு
இ.ம. எண். 2/2022 இன்
அ.வ. எண். 184/2013
நாள் : 10.02.2026